# அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபை

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 27 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஜுன் 09 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) கணக்குப் பதிவு நடவடிக்கைகளுக்காக பதியப்பட்ட நாட்குறிப்புக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக இனங்காணக் கூடிய விதமாக போதியளவான தகவல்கள் மற்றும் தொடர்பு விரங்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மின்சார உபகரண இருப்பு ரூபா 37,475 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 160,944 இற்காக வீதி விளக்குகள் பராமரிப்புத் தொகையினை மீளாய்வாண்டிற்கான வருமானம் எனக் கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 39,450 தொகைக்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் செலவுகள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது 06 செலவு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 832,191 தொகையான செலவுகளை குறிப்பிட்ட செலவுத் தலைப்புகளுக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக வேறு செலவுத் தலைப்புகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது சபையின் நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த 59 புத்தகங்களின் பெறுமதியினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) சபைக் கூட்டங்கள் நடைபெறும் மண்டபத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 725,786 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 502,697 தொகை என ரூபா 223,089 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது, ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,748,500 தொகை உட்படுத்தியிருந்தமையால் மூலதனச் செலவுகள் அத் தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. கடன்கொடுத்தோர்களுக்காக ஒதுக்கும் போது அத் தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது பலவின கடன்கொடுத்தோரிடம் ரூபா 7,946,931 தொகையொன்று கிடைத்திருந்ததுடன் அதனை மூலதன உதவிகள் (3.80) கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்ட போதும் நாட்குறிப்பு 17 இன் பிரகாரம் அக் கணக்கிற்கு வரவு வைத்து கடன்பட்டோர் கணக்கிற்கு ரூபா 5,612,320 தொகை மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன்பட்டோரிடம் பெறுவனவுகள் ரூபா 2,334,611 தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,836,396 தொகையாக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,684,692 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்குகளின் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 665 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,386,133 ஆகும்.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை

---

மீதிகளை உறுதிப்படுத்தல்கள், விவரமான பட்டோலைகள் ஆகிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 69,709,242 தொகையான 04 சொத்து விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணன்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) 1988 பிரதேச சபை விதிகள் (நிதி மற்றும் நிருவாக) கோவை

---

(i) விதி 164 இன் பிரகாரம் சபையின் கணக்குகள் மற்றும் ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதற்காக சிறு கையொப்பம் வைப்பதன் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். எனினும் முறையான திட்டமொன்றின் கீழ் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ii) விதி 188 இன் பிரகாரம் அனைத்து கடன்கள் மற்றும் கடன்களைத் திருப்பி செலுத்தல் தொடர்பாக பீ.எஸ்.44 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். எனினும் சபையினால் அவ்வாறு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த ரூபா 9,391,943 தொகையான கடன் தொடர்பாக அவ்வாறான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) விதி 218 இன் பிரகாரம் சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---

(i) நி.பி. 138 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளை சான்றுபடுத்தும் அதிகாரியினால் உறுதிச் சான்றுகளில் கையொப்பமிட்டு செலவுகளை உறுதிப்படுத்த வேண்டும். எனினும் சில உறுதிச்சான்றுகள் செலவுகளை உறுதிப்படுத்தும் அலுவலர் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ii) நி.பி. 139(7) இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மேற் பகுதியில் காட்டப்பட்டுள்ள தேறிய தொகை முறைப்படி செலுத்தப்படுகின்றது என ‘‘கொடுப்பனவு செய்யப்பட்டது’’ என்ற முத்திரையை உறுதிச் சான்றுகளில் மேற்பகுதியில் அடித்து அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் கையொப்பமிட வேண்டும். எனினும் சில உறுதிச் சான்றுகள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

(iii) நி.பி. 371(2) இன் பிரகாரம் ஏதேனும் ஒரு கருமதத்திற்காக வழங்கப்பட்ட துணைக் கட்டுநிதிகள் அது வழங்கப்பட்டிருந்த கருமம் முடிவடைந்தவுடனேயே தீர்க்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 829,234 முற்பணத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் ரூபா 13,537 தொகையில் காலங்கடந்த 06 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) நி.பி. 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் 06 வாகனங்கள் தொடர்பாக மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புடன் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,363,687 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,456,805 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான விடயம் | 2010 மதிப்பீடு | 2010 உள்ள வாறான | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2009 மதிப்பீடு | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா 000’ | ரூபா000’ | ரூபா000’ | ரூபா 000’ |
| வாடகை | 5,034 | 5,012 | 70 | 4,123 | 4,113 | 68 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 352 | 325 | 103 | 261 | 223 | 76 |
| எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் | 3,537 | 202 | 3,300 | 3,295 | 1,195 | 2,511 |
| ஏனைய வருமானங்கள் | 2,463 | 2,268 | 194 | - | - | - |

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 2,656,337 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

#### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 643,245 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் முறைப்படி அறவிடப்படாமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 102,050 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.5 நிலுவைக் கடை வாடகை

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 159 இன் பிரகாரம் நிலுவை கடை வாடகை அறவிடப்படாமையால் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,302 தொகை கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 9,167 | 9,635 | (468) | 9,152 | 8,613 | 539 |
| ஏனையவை | 3,498 | 5,890 | (2,392) | 3,405 | 4,360 | (955) |
| உப கூட்டுத் தொகை | 12,665 | 15,525 | (2,860) | 12,557 | 12,973 | (416) |
| மூலதன செலவுகள் | 2,900 | 67,305 | (64,405) | 3,140 | 93,520 | (90,380) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 15,565 | 82,830 | (67,265) | 15,697 | 106,493 | (90,796) |

2.4 மிகை விதிப்புக்கள்

---

மீளாய்வாண்டு இறுதி வரை நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் 1975-1988 காலப்பகுதியில் வழங்கப்பட்ட 07 மிகை விதிப்புக்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 24,662 ஆகும்.

2.5 மனித வள முகாமைத்துவம்

---

2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

---

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணியினர் | 01 | 01 |
| இரண்டாம் தர | 08 | 12 |
| ஆரம்ப தர | 13 | 13 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 14 |

(ஆ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய இலக்கம் 28, 2006 மே 10 திகதிய இலக்கம் 28(i), 2006 ஆகஸ்ட் 01 திகதிய இலக்கம் 28(ii) கொண்ட முகாமைத்துவ சேவை சுற்று நிருபங்களின் பிரகாரம் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாமல் சபையின் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்கள் 14 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தி சம்பளமும் செலுத்தப்பட்டுள்ளது.

2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

2.6.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 23,990,696 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 400,475 ஆகும்.

2.6.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,403,281 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 228 ஆகும்.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 03 அலுவலர்களிடம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 89,782 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. அப் பதவியணிக் கடனை ஒரே முறையில் அறவிடப்பட வேண்டியிருந்த போதும் அதனை தவணைகளாக அறவிடப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

2.6.3 அசையாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய காலம் முதல் வினியோகிக்கப்படாதிருந்த குழாய் கிணற்று உபகரணங்களின் பெறுமதி ரூபா 58,018 ஆகும்.

2.7 செயற்பாட்டுத் திறமையின்மை

(i) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் அது தொடர்பான 1994 பெப்ரவரி 18 ஆந் திகதி இலக்கம் 04/1994 கொண்ட நிதி அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம் சபையின் மந்திரிமார் 09 பேர் 2010 ஆம் ஆண்டிற்காக மேற்கூறிய கூற்றுக்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) மின் விளக்குகள் வழங்குதல் தொடர்பாக வழங்கள் கட்டளைகளில் விளக்குகளை பொருத்தும் இடம் தொடர்பாக மின் தொழிலாளர் அறிவித்திருக்கவில்லை. அத்துடன் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் குறிப்பிட்ட விளக்குகள் பொருத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரின் மேற்பார்வை செய்து உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(iii) 2010 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த 480 மிகைஒளி மின் குமிழ்களில் 335 விளக்குகள் திசெம்பர் மாதத்தில் மின் தொழிலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றின் 47 விளக்குகள் பொருத்தப்பட்டதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீதியாக 288 விளக்குகளும் பொருத்தப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.8 வாகனக் கட்டுப்பாடு

---------------------------------

(i) இலக்கம் 252-6468 கொண்ட கப் வண்டி 2010 திசெம்பர் 28 திகதி முதல் 2010 ஜனவரி 14 திகதி வரை 2994 கி.மீ. ஓடியிருந்தது. அது தொடர்பாக விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 14,367 பெறுதியான 196 லீட்டர் டீசல் வழங்கப்பட்டிருந்த போதும் அவை ஓட்ட அட்டவணையில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) இலக்கம் 53-5713 கொண்ட கப் வண்டிக்காக 2011 ஜனவரி 04 மற்றும் 05 இரண்டு தினங்களில் ரூபா 5131 பெறுமதியான 70 டீசல் லீற்றர்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அவை ஓட்ட அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீரகஸ்வெவ பாதையை செப்பனிடுவதற்காக 2011 ஜனவரி 05 திகதி நடத்தப்பட்ட சிரமதான நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளியில் இருந்து பெற்றிருந்த 09 டிரக்டர் வண்டிகளுக்காக 480 லீற்றர் எரிபொருள் சபையினால் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண வேலை பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவர் மேற்பார்வை செய்து உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் தொழில்நுட்ப அலுவலரினால் பூர்வாங்க மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

(i) சபை நிதியத்தில் இருந்து ரூபா 130,662 செலவிடப்பட்டு கொங்கிரீட் பலகை தயாரிக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்து இருந்ததுடன் கஜபா எனப்படும் விவசாய அமைப்பு ஒன்றிற்கு மாதாந்த ரூபா 9,000 கூலி அறவீடு செய்யும் அடிப்படையில் 2010 செப்டம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் முறைப்படி கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வாடகைக்குக் கொடுப்பனற்காக சபை தீர்மானம் ஒன்றும் எடுத்திருக்கவில்லை.

(ii) இந்த இயந்திர கஜபா விவசாய அமைப்பிற்கு வழங்கியிருந்த போதும் அதற்காக பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அந்த அமைப்பு பெற்றதற்காக குறிப்பு ஏதும் காணப்படவில்லை.

2.10 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை

-----------------------------------------------------------------------------------

சபையினால் பேணப்பட வேண்டிய 06 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.

2.11 நிதி ஒதுக்கீடுகளின் குறைவான பயன்பாடு

2010 ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் 04 செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 26,000 தொகையான ஏற்பாடுகள் ஆண்டின் போதும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

2.12 அகக் கணக்காய்வு

சபையின் போதியளவு அகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு